# காஞ்சிபுரம் உதவி ஆணையர் பிரிவில் உள்ள திருக்கோயில்களில்

## சித்திரை மாதம் நடைபெறவிருக்கும் திருவிழாக்களின் விவரப் பட்டியல்

| வ. எ ண் | திருக்கோயிலின் பெயர் மற்றும் தல வரலாறு / அமைவிடம் சுருக்கமாக | முக்கிய திருவிழாக்கள் மாதம் வாரியாக | திருவிழாக் களின் முக்கிய நிகழ்வுகள் தேதி வாரியாக | திருவிழாவின் சிறப்புகள் சுருக்கமாக | தொலை பேசி எண்கள் | Website & Email ID |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | அ/மி. நாகேச்சரசுவாமி திருக்கோயில், திருநாகேச்சரம், குன்றத்தூர், சென்னை–69.<br><br>பெரியபுராணம் இயற்றியவரும், அனபாயசோழன் மந்திரி சபையில் முதன்மை மந்திரியாக இருந்தவருமான சேக்கிழார் பெருமானால் கட்டப்பட்ட திருக்கோயிலாகும். அவரின் பிறப்பிடமும் இதுவே ஆகும்.<br><br>இத்திருக்கோயில் சென்னையில் இருந்து 24 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. சென்னையை சுற்றியுள்ள நவகிரக ஸ்தலங்களில் இராகு ஸ்தலமாக இத்தலம் உள்ளது. | 2016 ஏப்ரல் மாதம் | 12.4.2016 – கொடியாற்றம்<br><br>13.4.2016 – சூரிய பிரபை<br><br>14.4.2016 – அதிகார நந்திசேவை அன்னவாகனம் பச்சை மயில் வாகனம்<br><br>18.4.2016 – மகாஇரத உற்சவம்<br><br>21.4.2016 – திருக்கல்யாணம் தங்க ரிஷப வாகனம் கொடி இறக்கம் | இத்திருக்கோயில் ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதத்தில் 10 நாள் திருவிழா நடைபெறுகிறது. இத்திருவிழாவில் 7வது (நாள் 18.2.2016) திருத்தேர் திருவிழா நடைபெறுவது சிறப்பு | திரு. து. வள்ளுவன், செயல் அலுவலர், 9003477470 | thrnageswarar@gmail.com |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 2. | அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் (ம) பாஷ்யகாரசுவாமி திருக்கோயில், திருபெரும்புதூர்<br><br>இத்திருக்கோயில் சுமார் 6.35 ஏக்கர் பரப்பளவிலும் ஸ்ரீஆதிசேஷனால் உருவாக்கப்பட்ட அனந்த சரஸ் சயனம் குளம் சுமார் 3 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. திருபெரும்புதூர் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் அரை கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.<br><br>இக்கோயில் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பு பழமையான திருக்கோயிலாகும். ஆதித்யா மகாராஜா என்ற அரசருக்கும் சிவ புத கணங்களுக்கும் ஸ்ரீஆதிகேசவப் பெருமாள் காட்சியளித்தார். இத்திருக்கோயில் ஸ்ரீஇராமானுஜர் அவதரித்த ஸ்ரீ வைஷ்ணவ திருத்தலமாகும்.<br><br>ஓம் நமோ நாராயணய நம என்னும் அணைவரும் அறியச் செய்து பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்துள்ளார். ஸ்ரீஇராமானுர் தானுகந்த திருமேனியாக அருள் பாலித்து வருகிறார். | சித்திரை மாதம்<br><br>1.ஸ்ரீஇராமநவமி<br><br>2. ஸ்ரீபெருமாள் பிரம்மோத்சவம்<br><br>3. ஸ்ரீஇராமானுஜர் அவதார உற்சவம்<br><br>4. தேப்பல் உற்சவம் | 15.5.2016<br><br>22.4.2016 முதல் 01.05.2016 வரை<br><br>01.05.2016 முதல் 10.05.2016 வரை<br><br>12.05.2016 முதல் 15.05.2016 வரை | 1. ஸ்ரீஆதிகேசவப் பெருமாள் (ம) பாஷ்யகாரசுவாமி திருக்கோயில் காலை, மாலை வாகனம் புறப்பாடு, தினம் 2 மணி திருமஞ்ஜனம்<br><br>2. ஸ்ரீஇராமானுஜர் அவதார உற்சவம் காலை மாலை வாக புறப்பாடு தினம் 1 மணிக்கு திருமஞ்ஜனம்<br><br>3. தெப்பம் உற்சவம் மாலை 7 மணிக்கு திருமஞ்ஜனம் | திரு. வடிவேல்துறை, செயல் அலுவலர் 9786360054<br>044–27162236 | adhikesavaramanuja@gmail.com |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 3. | அருள்மிகு அஷ்டப்புஜப் பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம்<br><br>காஞ்சி மாநகருக்கு நடுவில் ரங்கசாமிகுளத்தின் அருகில் திருக்கச்சிநம்பிகள் வீதியில் சுமார் 1 ஏக்கர் நிலப்பரப்பில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் இத்திருத்தலம் அமைந்துள்ளது.<br><br>தல வரலாறு<br><br>திருமால் இவ்விடத்தில் மட்டும் தான் எட்டு கைகளோடு காட்சியளிக்கிறார். வலப்புற நான்கு திருக்கைகளில் காணப்படும் ஆயுதங்கள் கத்தி, சக்கரம், தாமரை, அம்பு இடப்புற நான்கு கைகளில் கோதண்டம், சங்கு, கேடயம், கதை ஆகியவைகளோடு அருள் பாலிக்கிறார்.<br><br>இந்தியாவிலேயே எட்டு திருக்கரங்களுடன் கூடிய பெருமாள் சன்னதி இங்கு மட்டும்தான் உள்ளது.<br><br>பிரம்மா தான் தொடங்கிய யாகம் நன்கு முடிவடைந்த பின்னர் தமக்கு நேர்ந்த இடையூறுகளைக் களைத்தெறிந்த பெருமாள் எண்கரத்துடன் அருள் புரியுமாறு பிரம்மன் வேண்ட நாராயணன் காஞ்சிபுரத்தில் அஷ்டபுஜ பெருமாளாக அருள்பாலித்து வருகிறார். | 1.சித்திரை பிரம்மோத்சவம்<br>2.இராமநவமி<br>3.பவித்ரோத்சவம்<br>4. நவராத்திரி உத்சவம்<br>5. ஆண்டாள் திருக்கல்யாணம்<br>6. திருக்கார்த்திகை<br>7. வைகுண்ட ஏகாதசி<br>8. புஷ்பவல்லித் தாயார் திருக்கல்யாணம் | 20.4.2016 முதல் 4.5.2016 வரை பிரம்மோற்சவம் நடைபெறுகிறது | மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசி திருநாளில் சொர்க வாசல் திறக்கும் சிறப்பு காஞ்சியில் இத்திருக்கோயிலுக்கு மட்டுமே உண்டு | ஆ.குமரன் செயல் அலுவலர் 99946 89735 | |